தமிழ்நாடு ஒருங்கிணைந்தபள்ளிக் கல்வி

அனுப்புநர்

திரு. க. இளம்பகவத், இ. ஆ. ப.,
சிறப்புப் பணி அலுவலர் (மு. கூ. பொ),
இல்லம் தேடிக் கல்வி,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை - 600 006.

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்.3545/C7/இ.தே.க/ஒபக/2022 நாள். 12.01.2024

அய்யா/ அம்மையீர்,

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – இல்லம் தேடிக் கல்வி திட்டம்– மாவட்ட/வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களை மாற்றம் செய்யும் பட்சத்தில் அத்தகவலினை (உரிய காரணத்துடன்) உடனடியாக மாநில அலுவலகத்திற்கு அனுப்ப அறிவுறுத்துதல் - சார்பு.

----------

கரோனா காலத்தில் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பு மற்றும் கற்றல் இடைவெளியை சரிசெய்வதற்காக தொடங்கப்பட்ட இல்லம் தேடிக் கல்வித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக மாவட்ட அளவில் ஒரு ஆசிரியர்ஒருங்கிணைப்பாளரும் வட்டார அளவில் ஒரு ஆசிரியர்ஒருங்கிணைப்பாளரும் செயல்பட்டு வருகின்றனர்.

இத்திட்டபணிகளை மேற்கொள்ளும் மாவட்டம்/ வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்கள் அவர்கள் பணியாற்றிய பள்ளிகளில் தற்காலிக ஆசிரியர்கள் தேவைப்படும் பட்சத்தில் பள்ளி மேலாண்மைக்குழு மூலமாக நியமிக்க வழிகாட்டுதல்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இல்லம் தேடிக் கல்விபணிகளை மேற்கொள்ளும் மாவட்டம்/வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களை மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் உரிய காரணத்துடன் அத்தகவல்களை எழுத்து பூர்வமாக மாநில அலுவலகத்திற்கு உடனடியாக

தெரிவிக்கப்பட வேண்டும். அவ்விடத்தில்,இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் நன்கு ஈடுபாடுள்ள ஆசிரியர்கள் கண்டறியப்பட்டு புதிய ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு இல்லம் தேடிக் கல்வி பணியில் ஆசிரியர்களை மாவட்ட/வட்டார ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமனம் அல்லது விடுப்பு செய்வதற்கான ஆணை உரிய வழியாக மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து மட்டுமே பிறப்பிக்கப்பட வேண்டும்.

எனவே மேற்கூறியவைகளை பின்பற்றி மாவட்டத்தில் சிறப்பாக இல்லம் தேடிக் கல்வி பணிகளை செவ்வனே நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

12/1/24

சிறப்புப் பணி அலுவலர் (மு. கூ. பொ)